திரு. மு. இராமநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உலக வங்கியினுடைய உதவியோடு சுமார் 75 இலட்சம் மதிப்பீட்டில் இந்தப் பணி தொடங்கும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் கோவை மாநகரில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக நடைபாதைகளிலும் பிரதான சாலை ஓரங்களிலும் சிறு கடைகள் வைத்து பிழைத்து வரக்கூடிய இந்த சிறு கடைக்காரர்களுக்கு கார் ஸ்டாண்டோடு, மற்ற பெரிய காம்ப்ளெக்ஸோடு ஒரு சிறு பகுதியை ஒதுக்கி, சிறு கடைக்காரர்களிடத்திலே குறைந்தபட்ச வாடகையை வசூலிக்கக்கூடிய முறையிலே ஒரு ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்ய முன்வருவார்களா? அதுபற்றிய செயற் குறிப்பை பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தனியான இடத்தை ஒதுக்கி அதைச் செய்வார்களா என்று கேட்டார். அதுபற்றி மட்டும் தற்சமயம் நான் பதில் சொல்வதற்கில்லை. ஆனால் நான் ஏற்கனவே அறிவித்த திட்டத்தை ஒட்டி வேறு பல —இன்னும் சரியான வளர்ச்சியை நகரம் பெறுவதற்குத் தகுதியான பல— வளர்ச்சித் திட்டங்களைச் சேர்த்து 400 இலட்சத்திற்கான மதிப்பீடுகள் கோவை மாநகராட்சி ஆணையாளரால் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் 210 இலட்சம் உலக வங்கியிடமிருந்தும், மீதி 90 இலட்சம் மாநகராட்சி நிதியிலிருந்தும் திரட்டப்பட உள்ளன. நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு நிதியிலிருந்து இதற்கு வழிவகை செய்வதற்கான கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து அனுப்பப்பட்டுள்ளது.

இடையக்கோட்டை அணைக்கட்டு கட்டும் திட்டம்

*1526 திரு. பி. காளியப்பன்,
திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், பழனி வட்டம் இடையக்கோட்டை அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1990 ஏப்ரல் 26]

(ஆ) திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், இடையக்கோட்டை அருகில் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை விட, 1990–91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் குறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள். ரூபாய் 21 கோடி மதிப்பீட்டுச் செலவில் 6500 ஏக்கர் நிலம் பயன்பெறக்கூடிய பழனி வட்டம், நங்காஞ்சி ஆறு நீர்த் தேக்கத் திட்டம் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள்.

9-55 மணி

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையக்கோட்டை, நங்காஞ்சி அணைக் கட்டுத் திட்டம் 1990–91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வரும் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அணையினுடைய வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது தான் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிறகு இந்த அரசு ஆணைப் பெற்று அதற்குப் பிறகு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதற்குப் பிறகு வேலை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்று கேட்டார்கள். அந்தப் பணி எப்போது நிறைவு பெறும் என்று கேட்க விரும்புகிறேன், அதோடு இந்தப் பணிக்கு எத்தனை செக்ஷன்கள் நியமிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்டில் இப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பொதுப் பணித் துறை மானியத்திற்குப் பிறகு இலாக்கா அது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. [redacted]என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம் வேடசந்தூர் அருகில் உள்ள குடகனாறு அணை உடைந்து 15 ஆண்டுகள் ஆகிறது. அதனுடைய மராமத்துப் பணி முடிந்து விட்டதா? அல்லது முடியாமல் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இது மூலக் கேள்விக்குத் தொடர்பு உடையதா?

திரு. என். பழனிவேல் : எப்போது முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாவிட்டாலும் தெரிந்த காரணத்தால் சொல்கிறேன். நீண்டகாலமாக அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தது. பிறகு அந்த இடத்திற்குச் சென்று பார்த்தேன். அதை விரைவாக முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பழனிவேல், ராமசாமி மற்றும் முத்துசாமி போன்றவர்களின் வற்புறுத்துதலின் பேரில் அங்கு சில தூண்கள் எழுப்பப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் சில தகராறுகள் இருந்த காரணத்தால் அதை 'கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன்' இடம் ஒப்படைத்து இருக்கிறேன். எனவே வேலைகள் இனிமேல் வேகமாக நடக்கும்.

நிரந்தர பாசன வசதி

*190 8திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், தடப்பள்ளி வாய்க்கால் பாசனப் கூவலூர், மேவாணி பரிசோதனை வாய்க்கால்கள் நிரந்தர பாசன வசதி செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கூவலூர் அல்லது கூகலூர் எனப்படும் வாய்க்காலும் மேவாணி வாய்க்காலும், பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கொடிவேரி அணைக்கட்டுக்கு மேலிருந்து புறப்படும் தடப்பள்ளி வாய்க்காலின் மூலம் நிரந்தர பாசன வசதி அளித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு நிரந்தர பாசன வசதி செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டு இருக்கிறார். நிரந்தர பாசன வசதிகளோடு அந்த வாய்க்கால்கள் இருக்கின்றன.